# வ/ப இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

## தொழில் வாய்ப்புகள்

வ/ப லங்கா மின்சார தனியார் கம்பனியானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான கடலோர வழியில் அதனது ஏழு கிளைகளினூடாக 650,000 பாவனையாளர்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கின்ற அமைப்பாகும். 1500 ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படும் மின்சார முறைமையை வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒன்றிணைப்புத் திட்டத்தில் (Power system strengthening and renewable energy integration project) ஈடுபடுத்த பின்வரும் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு தகுதிவாய்ந்த நபர்களைத் தேடுகின்றனர்.

### 1. செயற்றிட்டக் கணக்காளர் - (01 வெற்றிடம்)

| | |
|---|---|
| **கல்வித் தகைமைகள்:** | 1. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CA) இணை அங்வத்துவம் அல்லது<br>2. முகாமைத்துவ கணக்காளர்கள் பட்டய நிறுவனத்தின் (CIMA [UK]) அங்கத்துவம் அல்லது<br>3. சான்றுபடுத்திய பட்டய கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA [UK]) அங்கத்துவம்<br>4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கியல் / நிதி / B.com/ வியாபார நிர்வாகத் துறையில் பட்டம் மற்றும் CA/CIMA/ACCA இடைநிலைப் பரீட்சை |
| **அனுபவம்** | • 100 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைக் கொண்ட ஒரு நிறுவனத்தில் கணக்காளர் அல்லது கணக்காய்வாளராக ஐந்து (05) வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம் அல்லது<br>• திட்ட நிதி, கணக்காய்வு, காப்புறுதி, LC கையாளல், நிலையான ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் Billing செயன்முறைகளில் அரசாங்க அல்லது தனியார் துறை திட்டக் கணக்கியலில் தொழில்சார் அனுபவம் மற்றும் பின்வரும் துறைகளில் குறைந்தபட்சம் ஒரு வருட கால வேலை அனுபவம்: மின்சாரம், தொலைத்தொடர்பு, சுற்றாடல், உட்கட்டமைப்பு, நீர் மற்றும் கழிவுநீர் மற்றும் போக்குவரத்து |
| **ஏனைய தகைமைகள்** | • ஆங்கிலத்தில் எழுதுதல் மற்றும் வாய்மொழியில் சிறந்த தொடர்பாடல் திறன்<br>• மாற்றமடையும் சூழலில் இறுக்கமான காலத்திற்கு முகம்கொடுக்க ஒரு குழுவாக வேலை செய்யும் திறன்<br>• முன்முயற்சி எடுத்தல், முன்னுரிமைகள் அமைத்தல், மற்றும் திட்டங்களை முடிக்கும்வரை சுயாதீனமாக வேலை செய்யும் திறன் |

### 2. செயற்றிட்ட உதவியாளர் மற்றும் நிர்வாக அதிகாரி - (01 வெற்றிடம்)

| | |
|---|---|
| **கல்வித் தகைமைகள்:** | இளமாணிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை |
| **அனுபவம்** | • பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது 02 வருட கால சிறப்பு அனுபவம் அல்லது<br>• திட்ட உதவி மற்றும் திட்ட நிர்வாகத்தில் அரசாங்க அல்லது தனியார் துறைத் திட்டங்களில் குறைந்தபட்சம் 04 வருடங்கள் இயைபான தொழில்சார் அனுபவம்<br>மற்றும்<br>• பின்வரும் துறைகளில் குறைந்தபட்சம் ஒரு வருட கால வேலை அனுபவம்: மின்சாரம், தொலைத்தொடர்பு, சுற்றாடல், உட்கட்டமைப்பு, நீர் மற்றும் கழிவுநீர் மற்றும் போக்குவரத்து |
| **ஏனைய தகைமைகள்** | • ஆங்கிலத்தில் சிறந்த வாய்மொழி மற்றும் எழுத்துத் தொடர்புத் திறன்.<br>• சிறந்த அறிக்கை மதிப்பாய்வு திறன்கள் மற்றும் தரநிலைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல்.<br>• மாறும் சூழலில் இறுக்கமான காலக்கெடுவை சந்திக்க ஒரு குழுவாகப் பணியாற்றும் திறன்.<br>• சுயாதீனமாக வேலை செய்யும் திறன், முன்முயற்சி எடுக்கும் திறன், முன்னுரிமைகளை அமைத்து திட்டங்களை முடிக்கும் திறன்.<br>• பல பணிகளை திறமையாக நிர்வகிக்கும் திறன், துல்லியமான பதிவுகளைப் பராமரித்தல் மற்றும் சீரான திட்ட செயற்பாடுகளை உறுதி செய்யும் திறன்.<br>• கொள்முதல் மற்றும் திட்ட நிர்வாகம் தொடர்பான பிற ஆவணங்களில் உதவுதல்.<br>• கடிதப் போக்குவரத்து, அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் திட்ட புதுப்பிப்புகளுக்கு தெளிவான ஆவணங்களைப் பராமரித்தல். |

### 3. சமூக மற்றும் சுற்றாடல் அதிகாரி

| | |
|---|---|
| **கல்வித் தகைமைகள்:** | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானம், சுற்றாடல் விஞ்ஞானம்/ முகாமைத்துவம், சமூகக் கல்வி / முகாமைத்துவம், பிரயோக விஞ்ஞானம் அல்லது அது தொடர்பான வேறு ஏதாவது துறையில் இளமாணிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை |
| **அனுபவம்** | • பதவிக்கு இயைபான துறையில் ஆகக் குறைந்தது 03 வருட கால சிறப்பு அனுபவம் அல்லது<br>• சுற்றாடல், எரிசக்தி மற்றும் சமூகப் பாதுகாப்புத் துறையில் அரசாங்க அல்லது தனியார் துறைத் திட்டங்களில் குறைந்தபட்சம் 06 வருடங்கள் இயைபான தொழில்சார் அனுபவம் அல்லது<br>மற்றும்<br>• பின்வரும் துறைகளில் குறைந்தபட்சம் ஒரு வருட கால வேலை அனுபவம்: மின்சாரம், தொலைத்தொடர்பு, சுற்றாடல், உட்கட்டமைப்பு, நீர் மற்றும் கழிவுநீர் மற்றும் போக்குவரத்து |
| **ஏனைய தகைமைகள்** | • சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கான திறன் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச வழிகாட்டுதல்களின் பிரகாரம் தாக்கக் குறைப்பு நடவடிக்கைகளை கண்காணித்தல், பரிந்துரைத்தல் மற்றும் செயற்படுத்துதல்.<br>• திட்ட சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான செயற்பாடுகளை கையாளும் திறன்.<br>• மாறும் திட்ட சூழலில் இறுக்கமான காலக்கெடுவை சந்திக்க ஒரு குழுவாக பணியாற்றும் திறன்.<br>• சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான செயற்படுத்தல் சிக்கல்களை திறம்பட பகுப்பாய்வு செய்து தீர்க்கும் திறன்.<br>• நல்ல மக்கள் தொடர்பு திறன்.<br>• கணினி எழுத்தறிவு.<br>• திறம்பட தொடர்பு கொள்ளும் திறன்.<br>• ஆங்கிலத்தில் எழுதுதல் மற்றும் பேசுவதில் உயர் மட்ட தேர்ச்சி. |

### 4. கணக்கியல் உதவியாளர்

| | |
|---|---|
| **கல்வி / தொழில்சார் தகைமைகள்:** | **க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி மற்றும்** |
| **அனுபவம்** | **1. பின்வரும் தகைமைகளில் ஏதாவதொன்று**<br>1.1 CIMA இயக்க நிலை (Operational Level) அல்லது<br>1.2 HND (கணக்கியல்) 2ஆம் வருடம் அல்லது<br>1.3 பிரயோக நிலை - ACCA அல்லது<br>1.4 வியாபார நிலை (1ஆம்) பரீட்சை - CA இலங்கை அல்லது<br>1.5 Book Keepers (UK) நிறுவனத்தின் இறுதிப் பரீட்சை அல்லது<br>1.6 AAT இறுதிப் பரீட்சை அல்லது<br>1.7 CIMA Sri Lanka இறுதிப் பரீட்சை<br>மற்றும்<br>100 ஊழியர்களுக்கு மேற்பட்ட நிறுவனத்தில் நிறைவேற்றுத் தரத்தில் கணக்கியல் / கணக்காய்வுத் துறையில் தகைமைக்குப் பின்னரான ஐந்து (05) வருடகால அனுபவம். |
| **ஏனைய தகைமைகள்** | • கணக்கியல் தரநிலைகள், கொள்கைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் பற்றிய சிறந்த அறிவு<br>• ஆங்கிலம் மற்றும் தாய்மொழி இரண்டிலும் சிறந்த தகவல் தொடர்பு திறன்.<br>• அழுத்தத்தின் கீழ் பணிபுரியும் திறன் மற்றும் காலக்கெடுவை சந்திக்கும் திறன்.<br>• வலுவான பகுப்பாய்வு திறன், சிக்கல் தீர்க்கும் திறன் மற்றும் குழுப்பணி போன்றவை. |

**பொது நிபந்தனைகள்:**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் இரண்டு வருட காலத்திற்கு நியமிக்கப்படுவர்.

தெரிவு செய்யப்பட்ட நபரின் தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு போட்டி மற்றும் விரிவான சம்பளப் பொதி வழங்கப்படும்.

லெக்கோ அனைவரையும் மரியாதையுடன் நடத்தும் என்பதுடன் உள்ளடங்கிய சூழலில் பணியாற்ற சம வாய்ப்புகள் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய முயல்கின்றது. லெக்கோ அனைத்து இன, மத மற்றும் கலாசார பின்னணி, பாலினம், பாலியல் நோக்குநிலை அல்லது குறைபாடுகள் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் விண்ணப்பிக்கத் தகுதியுள்ள அனைத்து வேட்பாளர்களையும் ஊக்குவிக்கின்றது.

தயவு செய்து உங்கள் சுயதரவு, சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பிலக்கங்களை 2025 மார்ச் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் நபருக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

LECO

**மேலதிக பொது முகாமையாளர்,**
**மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**
**வ/ப இலங்கை மின்சார தனியார் நிறுவனம்,**
**1 ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்.**
**411, காலி வீதி,**
**கொழும்பு-03.**